இந்த அரசு அதை நீக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழகத்தினுடைய மேலாண்மை இயக்குநருக்கு அந்த உத்தரவைத் திரும்பப் பெற இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, ஏற்கெனவே இப்படி ஒரு தப்பான அடிப்படையில் நடவடிக்கை நடத்துவதற்கு அரசு உத்தரவுதான காரணமா அல்லது இந்த உதவி நிதிகள் கல்விக்குக் கொடுக்கக்கூடிய உதவி என்ற வகையில் இப்படி நிதி ஒதுக்கீட்டை அங்கே இருக்கிற நிர்வாகிகள் பார்த்து செய்தார்களா, அப்படிச் செய்திருந்தால் அந்த நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டுக்கு முன்னால் இருந்த அரசினுடைய விருப்பத்திற்கிணங்க அந்த உத்தரவு இடப்பட்டு இருக்கிறது. அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசப்: தலைவரவர்களே, விபத்துக்களினால் மாளுகின்ற காவல்துறை அதிகாரிகளுக்கு 10,000 ரூபாய் வழங்குவதைப்போல அவர்களுடைய தவறு இல்லாமல் விபத்துக்களில் மாறுகின்ற போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கும் 10,000 ரூபாய் தர அரசு முன்வருமா?

திரு. ப. கோ. கிட்டு: (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவர்களுக்கு—இறக்கின்றவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க அரசு வழிவகை செய்திருக்கிறது.

லாரி, பேருந்துகளின் விளக்குகள்.

*வினா எண் 818—திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரி மற்றும் பஸ்களில் ஒளி குறைக்கும் Auto dipper-ஐ கண்டிப்பாக பொருத்த வேண்டுமென அரசு உத்திரவிட்டுள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): அரசின் பரிசீலனையிலுள்ளது.

1979 ஏப்ரல் 25]

திரு. யா. சை. மூ. யூசுப் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பெருவாரியான விபத்துக்கள் — இரவு நேரங்களில் சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அதற்கு மூலக்காரணம் எதிரிலே வருகின்ற வாகனங்களின் அதிகமான ஒளியே ஆகும். ஆகவே, அந்த அதிகப்படியான ஒளியைக் குறைப்பதற்கு 'ஆட்டோ டிப்பர்' என்ற கருவி தனியார் துறையிலோ அல்லது அரசுத் துறையிலோ தயாரிக்கப்பட்டது என்பது உண்மையா? அப்படி தயாரிக்கப்பட்ட அந்தக்கருவி ஆய்வு செய்யப்பட்டதா? அதன் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, ஆட்டோ டிப்பர் என்ற கருவி இதுவரையில் அரசுத் துறையில் தயாரிக்கப்படவில்லை. அதை தனியார் துறையில், ஜெயப்பூரில் திருவாளர்கள் ஜெயின் எலக்ட்ரானிக் இன்டஸ்டிரீஸ் நிறுவனத்தார் தயாரித்து, அதன் சோதனைகள் பூனாவில் உள்ள இந்திய மோட்டார் ஆராய்ச்சிக் கழகத்தில் செய்யப்பட்டன. தானே ஒளியைக் குறைக்கும் அத்தகைய கருவியை குறிப்பாக லாரிகள், பேருந்துகளில் கட்டாயமாகப் பொருத்தச் செய்வதற்கு மாநில மோட்டார்வண்டிச்சட்டத்தைத் திருத்துவது பற்றி கருதிப்பார்க்குமாறு மாநில அரசை இந்திய அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் போக்குவரத்து ஆணையாளர், மாநில காவல்துறைத் தலைவர், காவல் துறை ஆணையாளர் ஆகியோரை இதுபற்றி இந்த அரசு கலந்து, அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டிருக்கிறது. அவர்களுடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் வாகனங்கள் செல்லும்போது டிம் லைட் போடாததால் எதிரிலேவரும் வாகனங்களமீது இடித்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அப்படி டிம் லைட் போடாத வாகனங்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குத் தண்டனை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, இந்த ஆட்டோ டிப்பர் கருவி வந்துவிட்டால் மேற்கண்ட விபத்துக்கள் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மூ. யூசுப் : தலைவரவர்களே, இந்த ஆட்டோ டிப்பர் விலை என்ன ஆகும்? அது உண்மையில் பயன்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, விலை விபரம் பற்றிய குறிப்பு ஏதும் கைவசம் இல்லை.